

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 114-வது பிறந்தநாளை முன்னிட்டு, கன்னியாகுமரி, காமராஜர் மணி மண்டபத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு இன்று (15.07.2016) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 448/2015 நாள்: 15.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 114-வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று (15.07.20-16) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தலைவர்களின் அரும்பெருமைகளை நினைவு கூறும்வகையில், செய்தி மக்கள் தொடர்புதுறையின் மூலம் மணி மண்டபங்கள் மற்றும் நினைவு மண்டபங்கள் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஆண்டுதோறும் தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாளை முன்னிட்டு, அரசு சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 114-வது பிறந்தநாளை முன்னிட்டு, கன்னியாகுமரி, காமராஜர் மணி மண்டபத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், இன்று (15.07.20-16) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி. எம்.எஸ். சாரதாமணி, மாவட்ட பால்வளத்தலைவர் திரு. எஸ்.ஏ.அசோகன், கன்னியாகுமரி பேரூராட்சித்தலைவர் திருமதி. பிரபா வின்ஸ்டன், துணை தலைவர் திரு. தம்பித்தங்கம், திரு. சந்தையடி பாலகிருஷ்ணன், திரு. சந்திரன், திரு. மணி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கன்னியாகுமரி மாவட்டம்.